**11.06.2026 STC 01/2023 DW2. சுபா**

கடந்த 10.06.2026ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது வீடு எத்தனை Square Feet–ல் அமைந்துள்ளது என்றால், எனக்குத் தெரியாது. முதல் தளத்தில் என்னென்ன அறைகள் உள்ளது என்றால், Room, Hall, Kitchen and Bathroom ஆகியவை அமைந்துள்ளது. நான் தாக்கல் செய்த Ex.D9 வீடியோ பதிவேடு மற்றும் புகைப்படத்தில் எனது வீட்டின் முழு பகுதிகளும் தெரியாது என்றால், சரிதான்.

2. நான் RC கிறிஸ்டின் மதத்தை சேர்ந்தவர் என்றால், சரிதான். வீட்டின் புதுமனை புகுவிழா எந்த கிழமையில் நடைபெற்றது என்றால், அது தெரியாது. பொதுவாக கிறிஸ்துவர்கள் யாரும் ஞாயிறு கிழமையன்று வீட்டின் நிகழ்ச்சிகளை நடத்த மாட்டார்கள் என்றால், திருமணம் நடத்த மாட்டார்கள்.

3. எங்கள் சர்ச்சில் ஞாயிறுக்கிழமையில் எந்த நேரத்தில் பூசை நடைபெறும் என்றால், காலை 07.30 மணி முதல் 09.00 மணி வரை நடைபெறும். எனது வீட்டின் புதுமனை புகுவிழாவின் பால்காய்ப்பின் பொழுது எங்களது சர்ச்சில் இருந்து Father வந்திருந்தாரா என்றால், அவருக்கு பதிலாக எங்களது சர்ச்சிலிருந்து வேறு ஒரு Father வந்திருந்தார்.

4. நாங்கள் எந்த சர்ச்சில் உறுப்பினராக இருக்கிறோம் என்றால், மிடாலக்காடில் உள்ள நல்லாயான் RC சர்ச்சில் உறுப்பினராக உள்ளோம். மேற்படி சர்ச்சில் ஒரு Father தான் உள்ளார் என்றால், சரிதான். ஆனால் அவருடன் மற்ற சில Father–களும் இருப்பார்கள். (**சாட்சி தானாக முன்வந்து அவர் திருமணத்திற்கு முன்பு இந்து மதத்தை சார்ந்தவர் என்றும் திருமணத்திற்கு பிறகு அவரது கணவரின் மதமான RC கிறிஸ்டியனாக மாறியதாகவும், அதனால் அவருக்கு RC சர்ச்சில் உள்ள விவரங்கள் நுணுக்கமாக தெரியாது என்றும் கூறுகிறார்**)

5. நான் 15 வருடங்களாக RC கிறிஸ்துவ முறையை தான் பின்பற்றி வருகிறேன் என்றால், நான் கடந்த 4 வருடங்களாக தான் சர்ச்சுக்கு சென்று வருவது வழக்கம். எங்களது சர்ச்சில் பங்குக்கு (நிரந்தரமாக) ஒரு Father தான் இருப்பார்கள் என்றால்,

சரிதான். நான் பங்கு Father–யை தான் புதுமனை புகுவிழாவிற்கு அழைத்தோம் என்றால், சரிதான்.

6. பங்கு Father எங்களது வீட்டின் புதுமனை புகுவிழாவிற்கு வந்தார் என்றால், வந்தார். பங்கு Father எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால், நாங்கள் பால்க்காய்ப்பதற்கு முன்னர் ஒரு அரை மணிநேரத்திற்கு முன்னர் வந்து Prayer செய்து விட்டு சென்று விட்டார். ஆனால் நேரம் சரியாக எனக்கு ஞாபமில்லை.

7. நான் சொல்வது போல் எங்களது புதுமனை புகுவிழா நிகழ்ச்சிக்கு எங்களது சர்ச்சில் இருந்து பங்கு Father கலந்துக் கொள்ளவில்லை என்றால், சரியல்ல. வீடியோ பதிவேட்டில் உள்ளவர்கள் எங்கள் உறவினர்கள் என்றால், சரிதான். அதே நபர்கள் தான் புகைப்படத்திலும் உள்ளார்கள் என்றால், சரிதான்.

8. நாங்கள் புதுமனை புகுவிழாவிற்கு எத்தனை அழைப்பிதழ்கள் தயார் செய்தோம் என்றால், 500 அழைப்பிதழ்கள் தயார் செய்தோம். முழுமையாக வீடு கட்டுமான பணிகள் முடியாத நிலையில் எனது உறவினர்களை மட்டும் வைத்து சம்பிரதாயத்திற்காக பால்க்காய்ப்பு நிகழ்ச்சி நடைபெற்றது என்றாலும், நான் சொல்வது போல் பெரிய அளவில் ஊரில் உள்ள நபர்களை அழைத்து புதுமனை புகுவிழா நடைபெறவில்லை என்றால், சரியல்ல.

9. பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் தான் எனது பெயரில் மானியம் பெற்று வீடு கட்டினோம் என்றால், சரிதான். அதில் எத்தனை தவணைகளாக பணம் கொடுப்பார்கள் என்றால், தவணையாக பணம் கொடுப்பார்கள் என்பது தெரியும், ஆனால் எத்தனை தவணைகள் என்று ஞாபகம் இல்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.